அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, ஒவ்வொரு மாவட்டத்திலேயும், ஒவ்வொரு நகரத்தையொட்டியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கே என்ன demand இருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கேற்ப பணிகளைத் துவக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம். காரணம், ஏற்கெனவே வீடு கட்டும் திட்டத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகள் பல ஆண்டுகளாக காலியாக இருக்கின்ற சூழ்நிலை உள்ளதால், அதனையெல்லாம் ஆய்வு செய்து, எங்கு அவசியம் இருக்கிறதோ, அங்கு வீடுகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக வீட்டு வசதி வாரியம் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா, மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

ஆதரவற்றோர் இல்லம்

*__4092—திரு. ஈ. ராஜா:__

மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் ஆதரவற்றோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது சங்கரன்கோவில் தொகுதியில், ஆதரவற்ற குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கு

2022 மார்ச் 22]

ஒருங்கிணைந்த வளாகம், அதாவது ஆதரவற்றோர் இல்லம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். அத்தனை சமூக மக்களுடைய குறைகளையும் தளபதியார் அவர்கள் நிச்சயம் தீர்த்து வைப்பார் என்ற ஒற்றை நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நமது தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தென்காசி மாவட்டம், திருத்தலங்களும், சுற்றுலாத் தலங்களும் நிறைந்த பகுதியாகும். அதிலும், குறிப்பாக எங்கள் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில், பிரசித்தி பெற்ற அருள்மிகு சங்கரனார், கோமதி அம்மாள் திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு உறவுகளின் ஆதரவின்றி இருக்கும் பல நபர்கள், கோயிலுக்கு வரும் பக்தர்கள் வழங்கும் யாசகத்தின்மூலம்தான், தங்கள் வாழ்வை நகர வீதிகளில், சுகாதாரமற்ற முறையில் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள முடியாத அளவில், மன ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் சகோதர, சகோதரிகள் சுமார் 27 பேர், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்த முத்தமிழறிஞர் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் அகவை தினத்தில் துவங்கி, இன்று வரை பசியில்லா தென்காசி என்ற தன்னார்வத் தொண்டு அமைப்பின் உதவியுடன், விழுப்புரத்தில் உள்ள தனியார் மன நலக் காப்பகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில், சுமார் 6 நபர்கள் தற்போது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் மிகவும் நல்ல முன்னேற்றத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களைப்போல், தொடர்ந்து உறவுகளால் புறக்கணிக்கப்பட்டு வீதிகளில் யாசகம் பெற்று வாழும் மக்களின் வாழ்வில் புது விடியல் பிறக்கும்விதமாக, அரசு சார்பில் எங்கள் சங்கரன்கோவில் பகுதியிலோ அல்லது தென்காசி மாவட்டத்திலோ அரசு மறுவாழ்வு இல்லம் அமைத்து, அவர்களுக்கு உண்ண உணவு, உடுத்த உடை, மருத்துவ உதவிகள், வசதிகள் கிடைத்திட ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுவாழ்வு இல்லம் என்பது மாற்றுத் திறனாளிகள் நலத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஏதாவது ஒரு தொண்டு நிறுவனம் அதை நிருவகிக்க அல்லது அதைத் தொடங்கிட முன்வந்தால்கூட அதனை அரசு மானியத்தோடு செயல்படுத்திட முடியும். அதுமட்டுமல்லாமல், மறுவாழ்வு இல்லத்தோடு இணைந்து முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் இல்லம் தொடங்க வேண்டுமென்றால்கூட அதற்குத் தொண்டு நிறுவனங்கள் முன்வரும்பட்சத்தில் 75 சதவிகிதம் அரசு மானியம், 25 சதவிகிதம் அந்தத் தொண்டு நிறுவன நிதியோடு ஒருங்கிணைந்த வளாகம் அமைத்திட நமது அரசு அவர்களுக்கு அனுமதி வழங்கும். அதுமட்டுமல்லாமல், விழுப்புரம் வரைக்கும் போக வேண்டாம், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் மறுவாழ்வு மையங்கள் இருக்கின்றன. அங்கே அவர்களைச் சேர்த்துவிடலாம் என்ற கருத்தினையும் கூறிக்கொண்டு, எந்தத் தொண்டு நிறுவனங்கள் தொடங்க முன்வந்தாலும் அரசு அவர்களுக்குத் துணை நிற்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்களே முன்வரலாமே!*

திரு. ஈ. ராஜா: *திருநெல்வேலி காப்பகத்தில் அதிகமான எண்ணிக்கையிருப்பதால் நாங்கள் விழுப்புரம் கொண்டு சென்றோம். சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் சுமார் 276 அங்கன்வாடிகள், குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 49 மையங்கள் தனியார் கட்டடங்களிலே வாடகையில் இயங்கி வருகின்றன. ஆகவே, கனிவுகூர்ந்து அந்த 49 மையங்களுக்கு, நமது தளபதியார் அவர்களின் அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென*

2022 மார்ச் 22]

தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின்மூலம் கட்டடங்கள் கட்டும் பணியினை நாங்கள் எடுத்துச் செய்வதில்லை. குழந்தைகளைப் பராமரிப்பதுதான் இத்துறையின் பணி. இருந்தபோதும், ஆண்டுக்கு மூன்று அங்கன்வாடிக் கட்டடங்களை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களும் கட்டித்தருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், நகராட்சி மற்றும் மாநகராட்சி நிதி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை நிதியின்மூலமும் அந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கூறி, பிற துறைகள்மூலம் அந்தக் கட்டடங்கள் கட்ட ஆவன செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

கால்நடை மருத்துவமனை

***15246—திரு. ம. பிரபாகரன்:**

மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, தேனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*